செ.வெ.எண்:29/2018 நாள்:14.04.2018

சிவகங்கை மாவட்டம்

**<u>சமூகநீதி தினமான இன்று டாக்டர் அம்பேத்கார் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தி பின்னர் ஸ்மார்ட் சிவகங்கா செயலியை மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியத்துறை அமைச்சர் திரு.ஜி.பாஸ்கரன் அவர்கள் துவக்கி வைத்தார்.</u>**







சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் இன்று (14.04.2018) மாவட்ட ஆதிதிராவிடர் நலத்துறையின் மூலம் சமூகநீதி தினவிழா நிகழ்ச்சியும் மற்றும் வேளாண் அறிவியல் ஆராய்ச்சி மையமும் மாவட்ட நிர்வாகமும் இணைந்து ஸ்மார்ட் சிவகங்கா செயலி துவக்க விழா நடைபெற்றது. இவ்விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.க.லதா,இ.ஆ.ப., அவர்கள் தலைமை வகித்தார். சிவகங்கை பாராளுமன்ற உறுப்பினர் திரு.பிஆர்.செந்தில்நாதன் அவர்கள், தமிழ்நாடு கால்நடை பல்கலைக்கழக துணைவேந்தர் டாக்டர்.சி.பாலச்சந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தார்கள். மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியத்துறை அமைச்சர் திரு.ஜி.பாஸ்கரன் அவர்கள் சட்டமாமேதை அண்ணல் டாக்டர்.அம்பேத்கார் அவர்களின் 121-வது பிறந்த நாளையொட்டி இன்று சமூகநீதி நாளாக அரசு கொண்டாடுவதை முன்னிட்டு அண்ணல் டாக்டர்.அம்பேத்கார் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தியதுடன் 6 பயனாளிகளுக்கு ரூ.50,000/- மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

தொடர்ந்து மாவட்ட நிர்வாகம் மற்றும் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் இணைந்து ஸ்டார்ட் சிவகங்கா செயலியை துவக்கி வைத்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசுகையில்,

தமிழகத்தில் முதன்மை மாவட்டமாக திகழ்திடும் வகையில் வேறு எந்த மாவட்டத்திலும் இல்லாத வகையில் முதன்முறையாக சிவகங்கை மாவட்டத்தில் பொதுமக்களின் முன்னேற்றத்தை கருத்தில் கொண்டு புதியதாக ஸ்டார்ட் சிவகங்கா செயலி என்ற ஆப் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் அரசு வழங்கும் திட்டங்கள் துறைவாரியாக செயல்படுத்துவதை பொதுமக்கள் தங்கள் மொபைல் போன் மூலமாகவே பார்த்து தெரிந்து கொண்டு திட்டங்களை பெறுவதற்கு வீட்டிலிருந்தே விண்ணப்பிக்கும் வகையில் இத்திட்டம் அமைந்துள்ளது. இதனால் அரசு வழங்கும் திட்டங்கள் ஒரு சிலருக்கு மட்டுமே கிடைக்கின்றது என்ற நிலை வராது. இதில் ஒருமுறை மனுதாரர் விண்ணப்பித்தால் அவருடைய சீனியாரட்டி பதிவு செய்வது கொள்வதுடன் அவருக்கு அந்த நலத்திட்டம் எப்பொழுது கிடைக்கும் என்ற நிலைவரை தெரிந்து கொள்ள முடியும். எடுத்துக்காட்டிற்கு வேளாண்மைத்துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களை இதன் மூலம் எளிதாகத் தெரிந்து பயன்படுத்திக் கொள்ளலாம். அந்த வகையில் இத்துறையின் மூலம் மழையளவு மற்றும் விதைகள் குறித்த விபரம் மற்றும் இருப்பு விபரம், விவசாயிகளின் உற்பத்திப் பொருட்களின் சந்தை

விலை விபரம், வேளாண் உபகரணங்கள் பெற விண்ணப்ப படிவம், உபகரணங்களின் செயல்பாடு குறித்த கையேடு போன்றவை இந்த செயலியில் தெரிந்து கொள்வதுடன் அந்த நிமிடமே செயலி வழியாகவே நலத்திட்டங்கள் குறித்து விண்ணப்ப படிவம் பதிவு செய்திடலாம். இதேபோல் கால்நடை பராமரிப்புத்துறையில் நாட்டுக் கோழி வளர்ப்பு செயலி வழியாக தெரிந்து கொள்வதுடன் அதன் மூலம் உடனடியாக விண்ணப்பித்திடலாம். இவ்வாறு பொதுமக்கள் தங்கள் இருப்பிடங்களிலேயே இருந்து தங்கள் திட்டங்கள் ஏற்ப துறைகள் குறித்து செயலியில் சென்று பதிவு செய்து விவரங்கள் தெரிந்து கொண்டு உடனடியாக பதிவு செய்து கொள்ள வேண்டும். அவ்வாறு பதிவு செய்யும் பொதுமக்களின் விண்ணப்பங்கள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் மாவட்ட முழுவதும் உள்ள பதிவுகளை அலுவலகத்திலிருந்தே கண்காணிப்பதுடன் அந்தந்தத் துறை நடவடிக்கை எடுக்கப்பட்டு

வருவதையும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிந்து கொள்வதுடன் இது குறித்து பொதுமக்களிடமும் தெளிவாக எடுத்துரைக்க ஏதுவாக இருக்கும். இத்திட்டத்தின் நோக்கம் பொதுமக்கள் அரசின் திட்டங்களை முழுமையாக பெறுவதற்கு எவ்வித காலவிரையமும் ஆகக்கூடாது என்பதே எண்ணமாகும். அந்த வகையில் இத்திட்டத்தை முழுமையாக செயல்படுத்திட மாவட்ட நிர்வாகம் முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. எனவே பொதுமக்கள் இதுபோன்ற அரிய வாய்ப்புகளை நல்லமுறையில் பயன்படுத்தி அரசு வழங்கும் நலத்திட்டங்களை இருந்த இடத்திலேயே பதிவு செய்து பெற்று பயன்படுத்திக் கொள்வதுடன் தமிழகத்தில் சிவகங்கை மாவட்டத்தை முதன்மை மாவட்டமாக திகழ்திடும் வகையில் விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் செயல்பட வேண்டுமென மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியத்துறை அமைச்சர் திரு.ஜி.பாஸ்கரன் அவர்கள் தெரிவித்தார்.

பின்னர் சமூகநீதி தினத்தையொட்டி மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் ஆற்றிய உரையின் தொகுப்பு நேரலையாக விவசாயிகள், பொதுமக்கள் பார்த்து தெரிந்து கொள்ளும் வகையில் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் ஒளிபரப்பப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.டி.ஜெயச்சந்திரன்,இ.கா.ப., தமிழ்நாடு கால்நடை பல்கலைக்கழக இயக்குநர் டாக்டர்.சுதீப்குமார், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.து.இளங்கோ, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி.காஞ்சனா, சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் (பொ) திரு.இராமபிரதீபன், வேளாண்மை இணை இயக்குநர் திரு.செல்வம், கால்நடை பராமரிப்புத்துறை இணை இயக்குநர் மரு.கருணாகரன், வேளாண் அறிவியல் ஆராய்ச்சி மையம் தலைமை பேராசிரியர் டாக்டர்.செந்தூர்முருகன், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அலுவலர் திரு.சௌந்தராஜ் மற்றும் அரசு அலுவலர்கள், விவசாய பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

::வெளியீடு::
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,**
**சிவகங்கை.**